1983, பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தற்போது கிராம அங்காடியாக இருந்தாலும் சரி, அல்லது வேறு அங்காடியாக இருந்தாலும் சரி, அது பஞ்சாயத்து கட்டடத்திலே இயங்குகிறது. சீவாடி கிராமத்தில் உள்ள பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடத்தில் அந்த அங்காடி இயங்குவதால், தாழ்த்தப் பட்ட மக்கள், அந்தப் பகுதிக்குச் சென்று பொருள்கள் வாங்க முடியாத அளவிற்கு சிரமம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குறையைப் போக்க அதனுடைய கிளை ஒன்றை அந்தப் பகுதியில் அமைக்க அரசு முயற்சிக்கும்.

சென்னை பிராட்வேயிலுள்ள வெளியூர் பேருந்து நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம்.

*வினா எண். 196—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வே வெளியூர் பேருந்து நிலையத்தை வேறிடத்திற்கு மாற்றி விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆம். சென்னை பிராட்வேயில் உள்ள வெளியூர் பேருந்து நிலையத்தினை வேறு இடத்திற்கு மாற்றி, தற்போதுள்ள இடத்தில் நகர் பேருந்து நிலையம் மற்றும் கடைவீதியாக மாற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையம் வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்கான செயற்குறிப்பு உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த பேருந்து நிலையம் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே மாற்றுகின்ற வரையில் அதை நல்ல முறையில் கவனிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி கவனிக்கலாம்.

பெரியகுளம் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீடு கட்டும் திட்டம்.

*வினா எண். 197—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் நகரில் அரசு ஊழியர்களுக்கென வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆம். மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் 66 அடுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தை தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டங்களின் 1979–80-ம் ஆண்டு முன்னுரிமை பட்டியலில் சேர்ப்பதற்கு அரசு ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தை செயல் படுத்த பெரியகுளத்திலுள்ள தாமரைக்குளம் கிராமம் நில அளவை எண். 563/3, 563/8-ல் 1.02 ஏக்கர் நிலத்தை எடுத்துக் கொண்டு இத்திட்ட வேலைகளுக்கான மதிப்பீடுகள் வீட்டுவசதி வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறன்றன.

சென்னை நகரை சுத்தமாக வைத்துக் கொள்வதற்கான திட்டங்கள்.

*வினா எண். 198—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரை சுத்தமாக வைத்துக்கொள்ளவும், கூவம் ஆற்றில் சாக்கடை தண்ணீர் கலக்காமல் இருக்கவும் அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) சென்னை நகரை சுத்தமாக வைத்துக் கொள்ள சென்னை மாநகராட்சியால் கீழ்க்காணும் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு வருகின்றன:—

(1) கொத்தவால் சாவடி போன்ற நடமாட்டம் அதிகமுள்ள இடங்களில் இரவில் துப்புரவு செய்தல்.

(2) தூய்மைப் பகுதிக்கு பரிட்சார்த்தமாக ஆய்வு செய்தல்.

(3) சந்து பொந்துகளில் எளிதாகச் செல்ல, சிறிய தள்ளு வண்டிகளை உபயோகித்தல்.

(4) தொட்டி கட்டுமானப் பணி.

(5) அதிக லாரிகள் வாங்கும் திட்டம்

(6) பரிட்சார்த்த முறையில் வீடுகளுக்கு குப்பைகளைக் கொட்டி வைக்க பிளாஸ்டிக் வாளி வழங்கும் திட்டம்.

மேலும் கூவம் ஆறு மற்றும் நீர் வழிப்பாதைகள் அசுத்த மடைவதைத் தடுப்பதற்காக சென்னை பெருநகர் குடிநீர் வாரியத்தால் உலக வங்கி உதவியுடன் நகரின் பிரதான கழிவு நீரேற்று நிலையங்களைப் புதுப்பித்தல் போன்ற பல வகையான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.